**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**கும்முடிப்பூண்டி**

| | |
|---|---|
| வழக்கு எண்: C.C. 91 /2025 | காவல் நிலையம்: கும்மிடிப்பூண்டி |

| | | |
|---|---|---|
| பெயர் : தாஸ் | அ.சா.1 | நாள் : 17.10.2025 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.தமிழரசன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தாஸ் | தாலுக்கா | : | கும்முடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | ஜெயவேல் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | கம்மார்பாளையம் | வயது | : | 36 |

(எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் கம்மார்பாளையம் கிராமத்தில் பூர்விகமாக வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். 05.11.2021 ல் எனது தந்தை யாரோ ஒருவருடன் பைக்கில் வந்தார். அப்போது அடிப்பட்டு கீழே விழுந்து விட்டதாக எனக்கு சொன்னார்கள். நான் சம்பவம் இடம் சென்று எனது தந்தையை எஸ்டிகே மருத்துவமனை அழைத்து சென்று சேர்த்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காக Peoply nursing home என்ற மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அங்கு எனது தந்தைக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள், ஆயினும் அவர் இறந்து விட்டார். எனவே நான் கும்மிடிப்முண்டி காவல் நிலையத்தில் இது தொடர்பாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். (**அந்த புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரைண செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விபட்டு தான் தெரியும் என்றாலும் சரிதான். எனது தந்தைக்கு அடிப்பட்டு 3 நாட்கள் கழித்து தான் புகார் அளித்தேன் என்றால் சரிதான். நான் கொடுதத புகாரில் நான் கையொப்பம் மட்டும் தான் இட்டேன், அதிலுள்ள விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அடிப்பட்டு 4 நாட்கள் கழித்து தான் எனது தந்தை இறந்தார் என்றால் சரிதான். யாரால் எப்படி என் தந்தைக்கு காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

போலிசார் என்னை தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/– தாஸ்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2025.10.17 12:31:22 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி